




வழக்கறிஞர் அ.அருள்மொழி
திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர்

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

வழக்கறிஞர் அ.அருள்மொழி உரையாற்று வதற்கு முன்பு 'மாற்று ஊடக மையம் கலைக்குழு'வின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பேராசிரியர் காளீஸ்வரன் நெறிப்படுத்துதலில் நடைபெற்ற இந்தக் கலைநிகழ்ச்சியில் தப்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு தமிழர் பாரம்பரிய கலைகள் அரங்கேறின. 'முற்போக்கு புத்தகக் காட்சி'யின் இறுதி நாளான அன்று, மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிப்பாளர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

# "மறைத்து வைத்தால் வேதம், பகிர்ந்து கொடுத்தால் திராவிட மாடல்!"

**கழக இளைஞர் அணி நடத்திய, 'தி.மு.க. 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில் 'அறிவைக் கொண்டாடுவோம்' என்ற தலைப்பில், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி அவர்கள் ஆற்றிய உரை :**

"உண்மையிலேயே இது ஒரு திருவிழா போலத்தான் இருக்கிறது. திருவிழா என்று சொன்னால், கிராமங்களில் ஒரு கோயில் இருக்கும், ஒரு தேர் இருக்கும், ஒரு சாமி சிலை இருக்கும். இந்தத் திருவிழாவில் என்ன இருக்கிறது? தேர் இருக்கிறது. தேருக்குள்ளே சிலை இருக்கிறது. அங்கே அய்யன் திருவள்ளுவர் இருக்கிறார்.

திருவிழாவில் வாங்கி சாப்பிடுவதற்கு பாப்கார்னும், குழந்தைகளுக்கு பலூனும் கொடுப்பதற்குப் பதிலாக, இந்த அறிவுப் புத்தகச் சந்தை இருக்கிறது. அங்கே போய் பெரியவர்கள் படிக்கிற ஆய்வுநூல்களும், குழந்தைகள் படிக்கிற நூல்களும் கொட்டிக் கிடக்கின்றன. இதற்குப் பெயர்தான் மாற்றுத் திருவிழாப் பண்பாடு என்பது.

### திராவிடத்தால் உயர்ந்தோம்

திராவிட இயக்கம் என்பது, கொண்டாட்டங்களை விரும்பாத இயக்கம் அல்ல. 'தீபாவளி வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்களே! நாங்கள் எதைக் கொண்டாடுவது?' என்று கேட்டபோது 'தீபாவளியை விடுங்கள், பொங்கலைக் கொண்டாடுங்கள்' என்றார் பெரியார். தீபாவளி வந்தால், தெருவெல்லாம் குப்பையாகும், காற்றெல்லாம் மாசாகும். பொங்கல் வந்தால் வாசலெல்லாம் அழகாகும், ஊரே சுத்தமாகும், வீடு புதியதாகும். இது அறிவுப் பண்பாடு. கொண்டாட்டத்தில் கூட அறிவோடு கொண்டாட வேண்டும் என்பதுதான் நம் பண்பாடு.

அண்மையில், நம்முடைய முதல்வர் அவர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கு உரையாற்றி, தந்தை பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்து ஏராளமான தமிழர்களைச் சந்தித்தார். அரங்கம் நிறைந்து தமிழர்கள் வெளியிலே நிற்கிறார்கள். முதல்வரைப் பார்ப்பதற்காக வந்தவர்களுக்கு உள்ளே வர இடமில்லை. ஆனால், நிகழ்ச்சி முடிந்தவுடன் முதல்வர் வெளியே சென்று அத்தனை பேரையும் சந்தித்து அவர்களோடு குடும்பம் குடும்பமாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். அப்பொழுது முதல்வரைச் சந்தித்த பலபேர் சொன்ன செய்தி, 'ஐயா! நாங்கள் இங்கே வேலை பார்க்கிறோம். இது திராவிட இயக்கத்தால் எங்களுக்குக் கிடைத்த பரிசு. அதை உங்களிடம் சொல்வதற்காகத்தான் நாங்கள் வந்தோம்' என்பதுதான். இப்படி 'திராவிடத்தால் உயர்ந்தோம்' என்பதைச் சொல்லும் உள்ளங்கள் உலகம் முழுவதும் இருக்கின்றன என்றால், அதற்குக் காரணம் நாம் அறிவை வளர்த்தவர்கள், அன்பை வளர்த்தவர்கள். வெறுப்பை விதைப்பவர்கள் அல்ல, சண்டை மூட்டுகிறவர்கள் அல்ல என்பதால்தான்.

### நல்லறிவு

அறிவிலே இரண்டு அறிவு உண்டு என்று வள்ளுவர் சொல்வார். நல்லறிவு ஒன்று இருக்கிறது, புல்லறிவு ஒன்று இருக்கிறது. நல்லறிவு என்ன?

'சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.'

தீமையின் பக்கம் மனத்தைச் செல்லவிடாமல், நல்ல விஷயங்களின் பக்கம் திருப்பும் அறிவு நல்லறிவு. அதே வள்ளுவர்

'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை' என்கிறார்.

'இன்னொருவருக்கு துன்பம் வரும்போது அதை தன் துன்பம் போல் எண்ணாவிட்டால், அறிவினால் பயனில்லை' என்றார் வள்ளுவர்.

உங்களுக்கு ஒரே ஓர் உதாரணம் சொல்கிறேன். கோவிட் நேரத்தில்தான் சிறந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள் இறந்தார். மக்கள் எல்லோரும் என்னவோ அவர்கள் வீட்டில் ஒருவர் இறந்ததைப் போல் வருந்தினார்கள். ஏனென்றால், அந்தக் குரல் ஐம்பது, அறுபது ஆண்டுகளாக நம் வீட்டில் ஒலித்துக்கொண்டே இருந்த குரல். அவர் மிகவும் நல்ல மனிதர். நல்ல பாடகர் என்பதைவிட நல்ல மனிதர். அதனால்தான் தங்கள் வீட்டில் ஒரு மரணம் நிகழ்ந்ததைப் போல் மக்கள் துடித்துப்போனார்கள்.

### அறிஞர்களைப் போற்றுவோம்

நாம் அறிவைக் கொண்டாடுகிறவர்கள். எப்படி? ஐயா அப்துல் கலாம், ஐயா மயில்சாமி அண்ணாதுரை, விஞ்ஞானி வீரமுத்துவேல் ஆகிய இவர்களெல்லாம் தமிழ்நாட்டில் பிறந்த அறிவுச் சுடர்கள். அரியலூரில் பிறந்த அறிவியல் அறிஞர் வளர்மதி, திருநெல்வேலியில் பிறந்த நிகர் ஷாஜி என்கிற விஞ்ஞானி. இவர்களெல்லாம் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள். இத்தனை விஞ்ஞானிகளை இந்திய விண்வெளி ஆய்வுக்குக் கொடுத்த மாநிலம் தமிழ்நாடு.

அவர்களெல்லாம் எதில் படித்தார்கள்? தமிழில் படித்தார்கள். பல பேர் அரசுப் பள்ளியில் படித்தவர்கள்தான். அரசுக் கல்லூரியில் படித்தவர்கள்தான். இவர்கள் எல்லாருக்கும் பொதுவாக ஒரு வாக்கியம் சொல்லுங்கள் என்று கேட்டால், அவர்கள் எல்லோரும் ஒரேயொரு வாக்கியம் சொல்வார்கள், - 'இந்தி தெரியாது போடா.' பெரிய விண்வெளி அறிஞர்கள். அவர்களால்தான் இஸ்ரோ இயங்குகிறது. ஆனால், அவர்கள் இந்தியைக் கற்றுக்கொள்ளவில்லை. தாய்மொழியைக் கற்றார்கள். ஆங்கிலத்தைக் கற்றார்கள். தங்கள் அறிவைப் பயன்படுத்தி வென்றார்கள்.

### மயில்சாமிக்கு உதவிய பெரியார்

நம்முடைய பாடத்திட்டத்தில் மயில்சாமி அண்ணாதுரை அவர்களைப் பற்றி, 10-ஆம் வகுப்பில் பாடம் இருக்கிறது. ஏன் பாடமாக இருக்கிறது? அவருடைய வெற்றி அப்படிப்பட்டது. அவரை 'நிலா மனிதன்' என்று சொல்கிறார்கள். நிலாவிலே போய் சந்திராயன் நிற்க இடமில்லை. தடுமாறியது. இதற்கு முன்பு செய்த எந்த முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை. 'வேறுமாதிரி முயல வேண்டும்' என்று யோசிக்கும்போதுதான் ஒரு புத்தகத்தைப் படிக்கிறார். அதில் ஒரு சின்ன பகுதி. அந்தப் பகுதி என்ன சொல்கிறது என்றால், 'நீ அதெல்லாம் வேலைக்கு ஆகவில்லை என்று யோசிக்கக் கூடாது. உன் முன்னோர் சொன்னதைவிட, உன் கடவுள் சொன்னதைவிட, உன் சாஸ்திரங்கள் சொன்னதைவிட உன் அறிவு பெரியது. அதைச் சிந்தி' என்று இருக்கிறது. 'அதைப் படித்தபோதுதான் நான் ஒரு புது வழியைக் கண்டுபிடித்தேன். அதுதான் சந்திராயன் ஒன்றின் வெற்றி' என்று சொன்னார் மயில்சாமி அண்ணாதுரை. அவர் மேற்கோள் காட்டிய கருத்தைச் சொன்னவர் யார்? தந்தை பெரியார். பெரியார் அவர்களின் கருத்தைப் பயன்படுத்தி வென்ற மயில்சாமி அவர்களை நாம் பாடத்திட்டத்தில் வைக்கிறோம்.

### பாடத்திட்டத்தில் புராணமா?

நமக்கு மாற்றாக 'நாங்கள் வேதத்தைச் சொல்லிக் கொடுக்கிறோம், புராணத்தைச் சொல்லிக் கொடுக்கிறோம்' என்று சொல்லும் பா.ஜ.க. தலைவர் அனுராக் தாக்கூர், 'விண்வெளிக்கு முதலில் சென்றது அனுமார்தான். அதைப் பாடத்திட்டத்தில் வைக்க வேண்டும்' என்கிறார். நாம் மயில்சாமி அண்ணாதுரையின் சாதனையைப் பாடப்புத்தகத்தில் வைக்கிறோம். பா.ஜ.க.வைச் சேர்ந்தவரோ புராணக் கற்பனையைப் பாடப் புத்தகத்தில் வைக்க வேண்டும் என்கிறார். இந்த வேறுபாடுதான் திராவிட இயக்கம்.

நம்முடைய அறிவு 3,000 ஆண்டு அறிவு, 5,000 ஆண்டு அறிவு என்று சொல்கிறோம். 'சாதலும் புதுவது அன்றே வாழ்தல் இனிதென்று மகிழ்ந்தன்றும் இலமே' என்கிறது தமிழ் இலக்கியம். 'நாங்கள் ஒன்றும் சாவைப் பற்றிக் கவலைப்படவில்லை. எங்களுக்கு எதற்கு சொர்க்கம் நரகம்? எதற்கு அதைப் பற்றிப் பயம்? சாதல் இயற்கை. வாழ்ந்துகொண்டே இருப்போம் என்று நினைத்துவிட முடியாது' என்பது அந்தப் பாடலின் பொருள். இதை எப்போது சொல்கிறார்கள்? 3,000 ஆண்டுக்கு முன்பு சொல்கிறார்கள். 'பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்றால், என்ன பொருள்? அறிவு இருந்தால் மதிக்க வேண்டும். அதற்காக அவர்கள் காலில் விழக் கூடாது. அறிவைக் கற்றுக்கொள்ள வேண்டும். மதிக்க வேண்டும். அதற்காக அவர்கள் காலில் விழ வேண்டும் என்று அவசியம் இல்லை என்ற சுயமரியாதையைக் கற்றுக்கொடுத்ததுதான் நம்முடைய அறிவு.

### அண்ணாவும் கலைஞரும்

'ஆரிய மாயை' என்று நூல் எழுதும்போது, அதில் 10-க்கும் மேற்பட்ட வரலாற்று நூல்களைப் பட்டியல் போட்டுக்காட்டினார் பேரறிஞர் அண்ணா. கலைஞர் அவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவரோடு வாதிட்டு வென்றவர்கள் இல்லை. அவருடைய ஆற்றலுக்கு இணையாக, தமிழ்நாட்டில் இன்னொரு தலைவர் பிறக்க முடியாது. நம் முதலமைச்சர் அவர்கள் அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கிறார்.

### அறிவே சொல்வோம்

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு' என்கிறது குறள்.

அறிவாளனிடம் பணம் இருக்காது. அறிவுதான் இருக்கிறது. அதுதான் பணத்தைவிட பெரிய செல்வம். அந்தச் செல்வம் உலகத்துக்கே சொந்தம் என்று சொன்ன இனம் நம்முடைய தமிழினம். அந்த அறிவைப் பரவலாக்கியது திராவிட மாடல். வேதம் என்பது என்ன? மறைத்து வைப்பது. மறைத்து வைத்தால் வேதம். பகிர்ந்து கொடுத்தால் திராவிட மாடல்.

அறிவைக் கொண்டாடுவது, அறிவுள்ளவர்களைக் கொண்டாடுவது இந்தத் தமிழ்நாட்டின் பண்பாடு என்பதை ஆட்சியில் இருந்து நிரூபித்திருப்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிகப் பெரிய சாதனை.

நம்முடைய முதல்வர் அவர்களே நம் சார்பாக, 'இந்த அறிவுத் திருவிழாவை ஆண்டுதோறும் நடத்துங்கள்' என்று துணை முதலமைச்சரிடம் அறிவுறுத்தியுள்ளார். அதையேற்று அவர் அறிவுத் திருவிழாவை ஆண்டுதோறும் நடத்த வேண்டும் என்று நாமும் வேண்டுகோள் விடுப்போம்." ●



* 'மாற்று ஊடக மையம் கலைக்குழு'வின் கலைநிகழ்ச்சி